செ.வெ.எண்: 6 நாள் : 16.3.2023

## <u>*மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ்குமார் அவர்கள் ஆய்வு*</u>

திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.பவன்குமார் ஜி.கிரியப்பனவர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.3.2023) மண்டலம்-2, பல்வேறு இடங்களில் மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ்குமார் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

திருப்பூர் மாநகராட்சி, மண்டலம்-2, பெரியபாளையம் பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை பார்வையிட்டு, மரக்கன்றுகளை நட்டு வைத்தார்கள்.

தொடர்ந்து, மண்டலம்-2, வார்டு -3, கவிதா நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் நான்காவது குடிநீர் திட்ட சோதனை ஓட்டம் தொடங்கப்பட்டு அப்பகுதியில் வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருவதனை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், மண்டலம்-2, லக்ஷ்மியம்மாள் நகர், சோழன் நகர் மற்றும் ஜெய் கணேஷ் நகர் பகுதிகளில் கழிவு நீர் வெளியேற்றம் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில் மண்டல தலைவர் திரு.ர.கோவிந்தராஜ் (மண்டலம்-2), மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் மாநகராட்சி.**

